[11th March 1959

Andimadam-Kodukkur road

* 697 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Divisional Engineer, Tiruchirappalli, recommended to the Government the change of alignment of the formation of road between Andimadam and Kodukkur in Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, so as to pass through Idaiyankurichi village in the same taluk; and

(*b*) the nature of orders passed by the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) Government did not accept the recommendation. The original alignment was allowed to stand.

SRI K. R. VISWANATHAN : மேற்படி சாலையானது இடையன் குரிச்சி வழியாகப் போனால் பல கிராமங்கள் அந்தப் பாதையின் வழியில் இருக்குமாதலால், இப்போது இருக்கக்கூடிய வழி காட்டு வழியாகச் செல்லுவதால் அந்த கிராமம் வழியாகச் சென்றால் வசதியாக இருக்கும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. மேற்படி கிராம மக்களாலும் மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அரசாங்கம் இதைச் சிந்தித்து அந்தப் பாதையை மாற்ற முயற்சிப்பார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்த ரோடு இப்போது 5 மைல் தூரம் சீராக்கப்பட்டிருக்கிறது. அந்த ரோடில் இந்த விதமான பாதை அமைப்பை எடுத்துக்கொள்ள 15,000 ரூபாய் கூடுதல் செலவாகும் என்று இருப்பதால் முன்பு எடுத்த சாலையையே எடுத்திருக்கின்றோம்.

Andimadam-Alathur road

* 698 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any mahazar, dated 26th August 1958 from the villagers of Andimadam, Udayarpalayam taluk, Tiruchirappalli district, regarding the alignment of road between Andimadam and Alathur (via) Agaram, Mudukulam and Pukkizhi villages; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. R. VISWANATHAN : 1956-ம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் சர்க்காருக்கு மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. நான் கூட இரண்டு தடவைகள் இத்தகைய மகஜரை அனுப்பியிருக்கிறேன். சர்க்கார் மகஜர் கிடைக்கவில்லை என்றால் எனக்குப் புரியவில்லை. இருந்தாலும், இத்தகைய ரோடு அமைக்கவேண்டுமென்பதன் அவசியத்தை அறிந்து அமைக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : 26–8–1958 தேதியிட்ட மகஜர் வந்ததா என்று குறிப்பாகக் கேட்டிருப்பதால் இல்லை என்று சொன்னேன். மார்ச் மாதத்தில் இதைப் பற்றி ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதை கவனித்தபோது இப்போது இந்த ரோடை எடுத்துக்கொள்ள வசதி இல்லை என்று தோன்றுகிறது.